திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கடும் வெயிலால் கருகும் பூக்கள்: முந்திரி விவசாயிகள் கவலை

First Published : 20 Apr 2010 05:54:53 AM IST

பண்ருட்டி, ஏப்.19: பருவ நிலை மாற்றத்தின் காரணமாக முந்திரி பூக்கும் தருணம் கால தாமதமானதாலும், தற்போது கடுமையான வெயில் காய்வதாலும் முந்திரி பூக்கள் கருகி வருவதால் வேதனை அடைந்துள்ள முந்திரி விவசாயிகள் வருண பகவானை எதிர் நோக்கியுள்ளனர்.

÷ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் பூ பூக்க தொடங்கும் முந்திரி மே மாதம் இறுதியில் முந்திரி கொட்டை அறுவடை முடிந்துவிடும்.

÷பண்ருட்டி வட்டத்தில் உள்ள 16900 ஹெக்டர் நிலப்பரப்பில் உள்ள முந்திரிக் காடுகளில் இருந்து சுமார் 12 ஆயிரம் மெட்ரிக் டன் முந்திரி கொட்டை உற்பத்தி செய்யப்படுகிறது.

÷கடந்த சில ஆண்டுகளாகவே பருவம் தவறிய மழை, புயல், கடும் பனிப்பொழிவு காரணங்களால் முந்திரி மகசூல் குறைந்ததால் விவசாயிகள் பாதிப்படைந்தனர்.

÷டிசம்பர் 2009-ல் பெய்த கனமழை காரணமாக நிலத்தில் ஈரப்பதம் அதிகரித்து, பருவ நிலை மாற்றம் ஏற்பட்டதால் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் பூ எடுக்க வேண்டிய முந்திரியில் பூக்கும் தருணம் கால தாமதமானது.

÷இந்நிலையில் தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் முந்திரி பூக்கள் கருகி வருவதால் முந்திரி மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

÷இது குறித்து முந்திரி விவசாயிகள் கானங்குப்பம் பலராமன், மருங்கூர் ராஜசேகர் ஆகியோர் கூறியது:

÷ஒரு ஏக்கர் முந்திரியில் சராசரியாக 8 மூட்டை கொட்டைகள் கிடைக்கும். காலதாமதமான பூக்கள், கடுமையான வெயிலால் பூக்கள் கருகி வருகிறது. ஏக்கருக்கு 2 மூட்டை கொட்டை கிடைப்பதே கடினம்.÷செலவை கூட ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இருப்பினும் இச்சமயத்தில் நல்ல மழை பெய்தால் எஞ்சியுள்ள அரும்புகள் பூத்து பிஞ்சு எடுக்க வாய்ப்புள்ளது. ÷தொடர்ந்து சில ஆண்டுகளாக சோதனையை சந்தித்து வரும் முந்திரி விவசாயிகளுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்க முன்வர வேண்டும் என கூறினர்.

÷முந்திரி சார்ந்த தொழில்கள் பாதிப்பு: இந்த ஆண்டு முந்திரி மகசூல் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளதால் முந்திரி பறுப்புகளை பதப்படுத்தும் தொழிற்சாலைகளும், ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும், முந்திரி தோலில் இருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகளும் பாதிப்படையக் கூடும் என கருதப்படுகிறது.

÷இதனால் கிராம பகுதியில் வேலை இழப்பு ஏற்படுவதுடன், முந்திரி பயிர் ஏற்றுமதி குறைவதால் அன்னிய செலாவணி ஈட்டும் திறன் குறைய வாய்ப்புள்ளதாக கூறுகின்றனர்.

÷தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராமலிங்கம் கூறியது: "எப்போதும் இல்லாத அளவுக்கு வெப்பம் அதிகரித்து காணப்படுவதால் பூக்கள் கருகி வருகிறது. ÷முந்திரி மரங்களை சுற்றியுள்ள புல், பூண்டுகளை விவசாயிகள் அகற்றி விடுவதால் காடுகளில் வெப்பத்தை சமநிலைப்படுத்த முடியாத சூழல் ஏற்படுகிறது.÷மேலும் தோட்டக்கலை, விவசாய, விவசாய அறிவியல் துறையினர் கூறும் அறிவுரைகளை விவசாயிகள் பெரும்பாலும் ஏற்றுக் கொள்வதில்லை. இவர்கள் தனியார் கடைகளில் கொடுக்கும் மருந்தை வாங்கி பயன்படுத்துகின்றனர்.

÷பெரும்பாலும் அதிக வீரியம் உள்ள மருந்துகளை வாங்கி தெளிப்பதால் மரங்களுக்கு மலட்டுத் தன்மை, இது போன்ற பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்புள்ளதாக' ராமலிங்கம் கூறினார்.

÷ஆண்டுக்கு ஒரு முறை விளையும் முந்திரிதான் எங்களின் வாழ்வாதார முக்கிய பணப் பயிர் என கூறும் விவசாயிகள் வாடியுள்ள தங்கள் வாழ்வில் ஒளியேற்ற வருண பகவான், காலத்தே நல்ல மழையை தர வேண்டும் என எதிர் நோக்கியுள்ளனர்.

**மல்லிகைப் பூ விலை கிடுகிடு உயர்வு**

First Published : 20 Apr 2010 05:48:21 AM IST

திருத்தணி, ஏப். 19: ஒரு வாரத்தில் பூ விலை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. திருமண சீசன் மற்றும் திருவிழா வருகையினால் இந்த விலை உயர்வு அதிகமாக இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

திருத்தணியில் பூ மார்க்கெட்டுக்கு தற்போது சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து பூ வரத்து மிக அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. கடந்த வாரம் பூ வரத்து மிக அதிகமாக இருந்தாலும் பூவின் விலை வீழ்ச்சியடைந்திருந்தது. இதனால் பூ விவசாயிகள் சில மாதங்களாகவே பாதிக்கப்பட்டு வந்தனர்.

கடந்த வாரம் ஒரு கிலோ மல்லிகைப் பூ ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனையானது. ஆனால் தற்போது திருமண சீசன் மற்றும் கோயில்களில் சித்திரை திருவிழா தொடங்கிஉள்ளதால் பூ விலை சற்று அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை திருத்தணியில் பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ மல்லிகைப் பூ விலை ரூ.110-க்கு விற்பனையானது.

திருமண சீசன் மற்றும் கோயில் விழாக்கள் தொடங்கி விட்டதால் தொடர்ந்து பூ விலை இன்னும் அதிகமாவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக சில்லறை, மொத்த பூ வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ சாமந்தி ரூ.150-க்கும், சம்மங்கி பூ ஒரு கிலோ ரூ.75-க்கும், கனகாம்பரம் ரூ.200-க்கும் விற்பனையானது.

இதே போல் ரோஜா பூவும் கடந்த வாரம் ரூ.50-ஆக இருந்தது. தற்போது ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**பொங்கலூர் பகுதியில் சூரியகாந்தி சாகுபடி அதிகரிப்பு**

First Published : 19 Apr 2010 11:44:51 AM IST

திருப்பூர், ஏப். 18: காங்கயம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சூரியகாந்தி சாகுபடி அதிகளவில் நடக்கிறது. குறுகிய காலத்தில் நல்ல லாபம் கிடைப்பதால் சூரியகாந்தி பயிரிட விவசாயிகள் ஆர்வம்காட்டுகின்றனர்.

திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளான நொச்சிபாளையம், முதியாநெரிச்சல், மாதப்பூர், கிருஷ்ணாபுரம், நல்லூரில் தென்னை, மக்காச்சோளம், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது கோடைகாலம் என்பதால் சூரியகாந்தி பயிரிடுவதில் விவசாயிகளிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது.

சூரியகாந்தி வறட்சியைத் தாங்கும் பயிர் என்பதாலும், குறைந்த அளவே தண்ணீர் மற் றும் பராமரிப்பு செலவு உள்ளதாலும் விரும்பி சாகுபடி செய்யப்படுகிறது. பொங்கலூர் சுற்று வட்டாரத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சுமார் 90 முதல் 110 நாட்கள் வரை இப்பயிர் காலம். இன்னும் ஒரு மாதத்தில் அறுவடைக்குத் தயாராக உள்ளன. சூரியகாந்தி விதைகளை காங்கயம் மொத்த வியாபாரிகள் கிலோ ரூ.20க்கு வாங்கிச் செல்கின்றனர். ஏக்கருக்கு 1500 கிலோ வரை சூரியகாந்தி விதை கிடைக்கும். கூலி, செலவுகள் போக ரூ.15 ஆயிரம் லாபம் கிடைக்கிறது என்கின்றனர் அப்பகுதி விவசாயிகள்.

**களைகட்டுகிறது கண்ணபுரம் மாட்டுச் சந்தை**

First Published : 19 Apr 2010 11:59:38 AM IST

வெள்ளக்கோவில், ஏப்.18: வெள்ளக்கோவில்,ஓலப்பாளையம் பக்கமுள்ள கண்ணபுரம் மாரியம்மன் கோயில் தேர் திருவி ழாவை முன்னிட்டு,வருடந்தோறும் ஏழு நாட்கள் நடைபெறும் புகழ் பெற்ற மாட்டுச் சந்தை,கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு

துவங்கி நடைபெற்று வருகிறது.

பல நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருவதாகக் கூறப்படும் மாட்டுத் தாவணியில் தற்போதைய புதிய வரவாக பல்வேறு ரக குதிரைகள் விற்பனைக்கு வந்துள்ளன.திருப்பூர்,கோபிசெட்டிபாளையம் போன்ற பகுதிகளிலிருந்து வந்துள்ள காட்டியா ரக, சுமார் இரண்டு வயதுடைய குதிரை ரூ.1.50 லட்சம் வரை விலை போகிறது.

நாட்டியக் குதிரை ரூ.3.00 லட்சம் வரை விலை போகிறது.

இது தவிர இப்பகுதிக்கு புதிய வரவாக ஆஸ்திரேலிய இன குட்டை ரக மாடுகள் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலத்திலிருந்து வந்துள்ளன.

ஒரு பெரிய ஆட்டின் அளவே இருந்தாலும் இரண்டு லிட்டர் வரை பால் கறக்கும் என்கின்றனர். சிறிய ரேக்ளா வண்டியில் நான்கு பேரை சர்வ சாதாரணமாக ஊப்ஞ் இழுத்துச் செல்லும். ஒரு ஜோடி ரூ.ஒரு லட்சம் வரை விலை சொல்கின்றனர்.

இச்சந்தைக்குப் பொள்ளாச்சி,பல்லடம்,தாராபுரம்,ஈரோடு பகுதிகள் மற்றும் பக்கத்து மாவட்டங்களிலிருந்து பெரும்பாலும் காங்கயம் இனக் கால்நடைகளே விற்பனைக்கு வந்துள்ளன.

திருச்சி,புதுக்கோட்டை,மதுரை,சேலம் மாவட்டங்களிலிருந்து வாங்கிச் செல்ல வியாபாரிகளும்,விவசாயிகளும் வந்துள்ளனர். சென்ற வருடத்தை விட மாடு வரத்து அதிகமாக இருந்தாலும் விலை சற்று குறைந்தே காணப்படுகிறது என்கிறார்

ஓலப்பாளையம் விவசாயி ஆண்டவர்துரை.

இது வரை மொத்தம் 9 ஆயிரத்து 500 மாடுகள் வந்துள்ளன. இரண்டு லிட்டர் பால் தரக்கூடிய கறவை மாடு சுமார் ரூ.25 ஆயிரம் விலை போகிறது. காங்கயம் ஜோடி காளைகள் ரூ.ஒரு லட்சம் முதல் மூன்று லட்சம் வரை விற்பனையாகின்றன. மாடு ஒன்றுக்கு சுங்கமாக ரூ.20 நிர்வாகம் சார்பில் வசூலிக்கப்படுகிறது. ஆனால் 10 ரூபாய்க்கு மட்டுமே ரசீது கொடுகப்படுவதாகவும்,கழிப்பிடம்,குடிநீர் போன்ற எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை எனவும் வெளியூர் வியாபாரிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

**வெளிநாடுகளுக்கு விவசாயிகள் குழு அனுப்ப பரிசீலனை**

First Published : 20 Apr 2010 12:00:00 AM IST

புதுச்சேரி, ஏப். 19: வெளிநாடுகளுக்கு விவசாயிகள் குழுவை அனுப்ப பரிசீலனை செய்யப்படும் என்று முதல்வர் வி.வைத்திலிங்கம் கூறினார்.

சட்டப்பேரவையில் நெல் உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்கள் குறித்து எம்.வை. ஓமலிங்கம் (அதிமுக) கேள்வி எழுப்பினார்.

இதற்கு முதல்வர் வைத்திலிங்கம் அளித்த பதில்: விவசாய உற்பத்தியைப் பெருக்க தொழில்நுட்பங்களும், நெல் வகைகளும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இருக்கின்றன. மேலும் புதிய தொழில்நுட்பங்கள் வேளாண் பல்கலைக் கழகங்களால் தொடர்ந்து

உருவாக்கப்பட்டு வருகின்றன. வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உற்பத்தியைத் தக்க வைத்துக் கொள்ள புதுச்சேரியில் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் அமல்படுத்தப்படும்.

நெல்லுக்கான ஆதரவு விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கடந்த காலங்களில் வீரிய ரக ஒட்டு நெல் சாகுபடி

செய்யப்பட்டது. ஆனால் தகுந்த தட்பவெப்ப நிலை இன்மையால் அத் திட்டம் வெற்றி பெறவில்லை. எனவே வீரிய ரக ஒட்டு நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வரவில்லை என்றார்.

அப்போது குறுக்கிட்ட ஓமலிங்கம் ஸிபிக் உள்ளிட்ட நிறுவனங்கள் அளிக்கும் விதைகள் நன்றாக இருக்கின்றன. அதை அரசு அங்கீகரித்து விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றார்.

இதற்குப் பதில் அளித்த முதல்வர் வைத்திலிங்கம், அது போன்ற விதைகளை அங்கீகாரம் கொடுக்காமல் வாங்கிக் கொடுக்கலாம். விவசாயிகள் எதை விரும்புகிறார்களோ அதைச் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார்.
அப்போது தியாகராஜன் (காங்கிரஸ்) குறுக்கிட்டு, அரசு சார்பில் விதை கொடுப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்றார்.
இது தொடர்பாக வேளாண்துறை மற்றும் பாசிக் நிறுவனத்துடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் வைத்திலிங்கம் கூறினார்.
அப்போது ஓமலிங்கம் குறுக்கிட்டு, வெளிநாட்டு தொழில்நுட்பங்கள் மூலம் விவசாயம் செய்வது லாபமாக இருக்கிறது. விவசாயிகள் குழுவை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றார்.
இதற்குப் பதில் அளித்த முதல்வர் வைத்திலிங்கம், ஏற்கெனவே இஸ்ரேல் நாட்டுக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தோம். யாரும் போகவில்லை. மறுபடியும் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்கிறோம் என்றார் முதல்வர் வைத்திலிங்கம்.

**தமிழ்நாடு கூட்டுறவு தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக் கிளைகளாக்க வலியுறுத்தல்**
First Published : 19 Apr 2010 10:06:59 AM IST

புதுக்கோட்டை, ஏப். 18: தமிழகத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கிளைகளாக மாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஊழியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
புதுக்கோட்டையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அச்சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
மேலும், ""தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஊழியர்களுக்காக தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தால் 30.10.2009-ல் பதிவாளரிடம் அளிக்கப்பட்ட ஊதிய உயர்வு கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
பணி ஓய்வு பெற்றவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய ஓய்வுப் பலன்களை பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். பணி வரன் செய்யப்படாத ஊழியர்கள் அனைவரையும் பணிவரன் முறைப்படுத்த வேண்டும்.
காலியாக உள்ள பணியிடங்களில் கலந்தாய்வு மூலம் மறு பணியமைப்பு செய்ய வேண்டும். தமிழக அரசு பதவி உயர்வுக்கான தடையாணையை விலக்கிக்கொண்ட பிறகும் பதவி உயர்வு வழங்காமல் காலம் தாழ்த்துவதைத் தவிர்க்க வேண்டும்.
மறு பணி அமைப்பு செய்யப்பட்டவர்களுக்கு தாய் வங்கியின் ஊதியம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வங்கி வளர்சிக்கு தேவையான அனைத்து வகையான கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
கூட்டத்துக்கு, சங்கத்தின் மாநிலத் தலைவர் ஆர். ராமதுரை தலைமை வகித்தார். அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலர் பி. பாலகிருஷ்ணன், மாநிலச் செயலர் ஜி. வைரப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலப் பொதுச்செயலர் எஸ். ஜினசந்திரன் தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

**அறுவடை திருவிழா**
First Published : 20 Apr 2010 12:41:36 AM IST

ஸ்ரீபெரும்புதூர், ஏப்.19: குன்றத்தூர் ஒன்றியம் ஆதனூர் பகுதியில் உள்ள சிஎஸ்ஐ கிறிஸ்தவ தேவாலயத்தில் 6-ம் ஆண்டு அறுவடை திருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

÷விழாவுக்கு ஆலய போதகர் சாந்தசாலன் தலைமை தாங்கினார், விழாவில் கூடுவாஞ்சேரி, மாடம்பாக்கம், ஒரத்தூர்,ஆதனூர், வினோபாவாநகர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தங்கள் வீடுகளில் விளைவித்த காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை இறைவனுக்கு காணிக்கையாக அளித்தனர்.
÷மேலும் விழாவில்  பாட்டுப் போட்டி, கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு ஆலய நிர்வாகிகள் ரிச்சர்டு, சுந்தர் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

**விவசாயத் தொழிலாளர்கள் வீடு கட்ட மானியம் வழங்கக் கோரிக்கை**

First Published : 20 Apr 2010 12:59:04 AM IST

தருமபுரி, ஏப்.19: தருமபுரி அருகேயுள்ள இலளிகம் பகுதியில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலவச வீட்டுமனைப் பட்டாவில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு மானியம் வழங்க வேண்டும் என்று தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்தது.
சங்கத்தின் பேரவைக் கூட்டம் இலளிகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. வட்டக் குழு உறுப்பினர் எல்.பி. ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.
இலளிகம் பகுதியில் 84 விவசாயத் தொழிலாளர்களுக்கு பிப்ரவரி மாதம் மாவட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ள இலவச வீட்டுமனைப் பட்டாவில் வீடுகள் கட்டுவதற்கு மானியம் வழங்க வேண்டும்.
இலளிகம் அரசு மேல்நிலைப் பள்ளியை பிரித்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
இப் பகுதிகளில் உள்ள ரேசன் கடைகளில் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் முறையாக ரேசன் பொருள்கள் விநியோகம் செய்ய வேண்டும். ஏப்ரல் 27-ம் தேதி நடைபெறும் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தில் விவசாயத் தொழிலாளர்கள் பங்கேற்பது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.
மாவட்ட துணைச் செயலர் ஜெ. பிரதாபன், வட்ட துணைச் செயலர் முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**"உணவுப் பொருள் உற்பத்தி சேதாரத்தால் ஆண்டுக்கு ரூ. 66,500 கோடி இழப்பு'**

First Published : 19 Apr 2010 11:25:07 AM IST

நாமக்கல், ஏப். 17: உணவு தானியம், பழங்கள் மற்றும் காய்கறிகள் மொத்த உற்பத்தியில் சேதாரத்தால் மட்டுமே ஆண்டுக்கு ரூ.66,500 கோடி இழப்பு ஏற்படுவதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ப. முருகேசபூபதி தெரிவித்தார்.
நாமக்கல்லில் சனிக்கிழமை நடைபெற்ற மதிப்பூட்டிய வேளாண் பொருட்கள் விற்பனை கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் அவர் பேசியது:
உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. ஆண்டுக்கு 105 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதேபோல், காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தியில் 2-வது இடம் உள்ளது. உணவு தானிய உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் உள்ளோம். ஆண்டுக்கு 230 மில்லியன் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்படுகிறது.
இத்தகைய பெருமையைப் பெற்றிருந்தாலும் இவற்றை மதிப்பூட்டிய பொருட்களாக மாற்றம் செய்யாததாலும், இருப்பு வைப்பதில் சேதாரம், எலி, பூச்சிகள் தொல்லையால் சேதாரம், போக்குவரத்தில் ஏற்படும் சேதாரம் ஆகிய காரணங்களினாலும் பல கோடிக்கு இழப்பு ஏற்படுகிறது.
மலேசியாவில் ஒட்டுமொத்த உற்பத்தியில் 83 சதம் மதிப்பூட்டிய பொருட்களாக மாற்றம் செய்யப்படுகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டில் 78, பிரான்ஸ், பிரேசில் நாடுகளில் 70, அமெரிக்காவில் 65, தாய்லாந்தில் 30 சதம் என மொத்த உற்பத்தியில் பெரும்பகுதியை மதிப்பூட்டிய பொருட்களாக மாற்றம் செய்து சந்தைப்படுத்துவதால் கூடுதல் லாபம் பெறுகின்றனர்.

ஆனால், இந்தியாவில் ஒட்டுமொத்த உற்பத்தியில் 2.1 சதம் மட்டுமே மதிப்பூட்டிய பொருட்களாக மாற்றம் செய்து விற்பனை செய்கிறோம். இதன் காரணமாக உணவு தானிய உற்பத்தியில் மட்டும் 6 சதம் சேதாரமாக கணக்கிடப்படுகிறது. இதன் மூலம், ஆண்டுக்கு ரூ. 21,500 கோடி இழப்பு ஏற்படுகிறது. இதேபோல், காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியில் 25 முதல் 35 சதம் வரை சேதாரமாக கணக்கிடப்படுகிறது.

இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 45 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படுகிறது. தற்போதைய சூழலில் இந்திய விவசாயிகள் 25 சதம் மட்டுமே லாபம் ஈட்டி வருகின்றனர்.

மதிப்பூட்டிய பொருட்களாக மாற்றம் செய்து சந்தைப்படுத்துவதன் மூலம் கூடுதலாக 50 சதம் லாபம் ஈட்டலாம். குறிப்பாக, காய்கறிகள் மற்றும் பழங்களில் இருந்து எண்ணற்ற மதிப்பூட்டிய பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யலாம். இதற்கு, மத்திய, மாநில அரசுகள் மூலம் பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகளும், சுயதொழில் துவங்குவதற்கான கடனுதவிகளும் வழங்கப்படுகிறது. இவற்றை உரிய முறையில் பயன்படுத்தி விவசாயிகள் மதிப்பூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களை துவங்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**சூறாவளி காற்றில் பயிர்கள் பாதிப்பு நிவாரணம் கேட்கும் விவசாயிகள்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி மாவட்ட ஊராட்சி உறுப்பினரும், மாவட்ட திட்டக்குழு உறுப்பினருமான கணேசன், குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் கொடுத்த மனுவில் கூறியிருப்ப தாவது: பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில் கடந்த 17ம் தேதி மாலை சூறாவளி காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது. ஜமீன்புரவிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ஆதியூர் சுற்றுப்பகுதியில் காற்றின் வேகம் அதிகமாக இருந்தது. இதனால், ஆதியூரில் 300க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் வேரோடு பெயர்ந்து சாய்ந்து விட்டன. சுமார் 20 ஏக்கரில் பயிரிடப்பட்ட இரண்டாயிரத்துக்கும் அதிகமான வாழை மரங்களும், மரவள்ளிக்கிழங்கும் முழுவதுமாக சேதமடைந்து விட்டது. மேலும் விவசாய நிலத்தில் இருந்து வீடுகளின் மேற்கூரை காற்றின் வேகத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாமல் பறந்து விட்டன. ஆதியூரில் மயில்சாமி, பெருமாள், செந்தில்வேல், பழனிச்சாமி ஆகியோரின் தோப்புகளில் தென்னை மரங்களும், வாழைகளும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆதியூர் நெசவாளர் காலனியில் நிறைய வீடுகள் சேதமடைந்துள்ளன. கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், வேளாண் துறை அலுவலர்கள் ஆதியூரில் நேரடி விசாரணையில் ஈடுபட்டு சேதமதிப்பை நிர்ணயம் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள உண்மையான பாதிப்பு நிலவரத்தை ஆராய்ந்து அரசுக்கு அனுப்பி, நிவாரண தொகை கிடைக்க பரிந்துரை செய்ய வேண்டும்.

**விவசாய தொழிலாளர்கள் சங்க சிறப்பு பேரவைக்கூட்டம்**

தர்மபுரி: தமிழ்மாநில விவசாய தொழிலாளர்கள் சங்க சிறப்பு பேரவை கூட்டம் தர்மபுரி அடுத்த லளிகத்தில் நடந்தது. சங்க வட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் பிரதாபன் பேசினார். வட்ட துணை செயலாளர் சின்னசாமி, வட்டக்குழு உறுப்பினர்கள் சாந்தாமணிவேல், பெரியசாமி, மூர்த்தி, காவேரியம்மாள், காளியம்மாள் உள்பட பலர் கலந்து கொண்டனர். லளிகம் கிளைக்கு புதிய தலைவராக கிருஷ்ணன், துணை தலைவராக ராஜாமணி, செயலாளராக பெருமாள், துணை செயலாளராக துரைசாமி, பொருளாளராக சின்னசாமி, நிர்வாக குழு உறுப்பினர்களாக ராஜேந்திரன், கிருஷ்ணராஜ், முருகன், சாந்தா மணிவேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். லளிகம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள்

படிக்கின்றனர். பள்ளியை இரண்டாக பிரித்து மாணவிகளுக்கு தனிப்பள்ளி துவங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரேஷன்கடைகளில் மாதம் முழுவதும் அரிசி, மண்ணெண்ணெய், கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கொடைக்கானலில் மழையில்லாததால் விவசாயம் பாதிப்பு : நீர் மட்டம் குறைந்து விட்டதால் விவசாயிகள் கவலை**

கொடைக்கானல் : கொடைக்கானலில் எதிர்பார்த்த மழையில்லாததால், நிலத்தடி நீர் மட்டம் மிகவும் மோசமான நிலைக்கு சென்று விட்டது. தண்ணீர் பற்றாக்குறையால் காய்கறி விளைச்சலும் பாதிக்கப் பட்டுள்ளது.
கொடைக்கானலில் கடந்த 2007 ஜன., முதல் ஏப்ரல், வரையில் 50 மி.மீ., மழையும், 2008ல் ஜன., மார்ச் வரை 40 மி.மீ., ஏப்ரலில்15 மி.மீ., மழையும்,2009ல் ஏப்., வரை 18.9 மி.மீ., மழையும் பெய்துள்ளது. நடப் பாண்டில் கடந்த 15ம்தேதி வரை ஒரு செ.மீ., மழை கூட பதிவாகவில்லை. கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் மிகக் குறைவாக மழை பெய் துள்ளது. நகர், கிராமப்பகுதிகளில் நிலத்தடி நீர் அதள பாதாளத்திற்கு சென்று விட்டதால் விவசாயிகளின் சாகுபடி பரப்பும் 40 சதவீதம் வரை குறைந்து விட்டது.
விவசாயி கூறுகையில்: கொடைக் கானலில் மழைநீர், நீர்த் தேக்கங் களை நம்பியே விவசாயப்பணி நடைபெறுகிறது. போர்வெல் அமைத்தாலும், நீர் வருவதில்லை. தண்ணீர் இன்றி, விவசாயம் செய்ய முடியவில்லை. ஆறுமாதம் மழை, ஆறுமாதம் வெயில் இருந்த கொடைக்கானலில் ரோடு விரிவாக்கம், குடியிருப்பு கட்டுவதற்காக ஏராளமான மரங்கள் அனுமதியின்றி வெட்டப்படுகிறது. நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த நீர்த் தேக்க பராமரிப்பு,மழைநீரை சேமித்து வைத்தல், மரம்வளர்த்தல் பற்றிய விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.' என்றார்.

**கொளுத்தும் வெயிலிலும் வெண்டை விளைச்சல் அமோகம்**

டி.என்.பாளையம்: கொளுத்தும் வெயிலிலும் வெண்டைக்காய் விளைச்சல் அமோகமாக இருப்பதால் டி.என்.பாளையம் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். டி.என்.பாளையம் விவசாயிகளின் நீராதாரமான குண்டேரிப்பள்ளம் அணை வற்றி விட்டதால், ஆறு மாதங்களாக விவசாயத்தில் பெருமளவு விளைச்சல் பெற முடியவில்லை. இதனால், நொந்து போயிருந்த விவசாயிகளுக்கு நம்பிக்கை தரும் விதமாய் அமைந்திருக்கிறது வெண்டைக்காய் விளைச்சல். பங்குனியில் நடவு செய்து சித்திரையில் அறுவடை செய்யக்கூடிய குறுகிய காலப்பயிர் வெண்டை. வெயில் சீஸனிலும் செழித்து வளரக்கூடிய இப்பயிரை டி.என்.பாளையம் பகுதியில் ஏராளமானோர் சாகுபடி செய்துள்ளனர். வெண்டைக்காய் விதை ஏக்கருக்கு இரண்டு கிலோ தேவை. இரண்டு கிலோ விதை விலை 2,600 ரூபாய். உழவு செய்ய டிராக்டர் கூலி, தண்ணீர் பாய்ச்சும் செலவு என ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயாகிறது. வெண்டைக்காய் ஒரு கிலோ 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு இரண்டு டன் வெண்டைக்காய் விளைச்சல் கிடைக்கிறது. விவசாயிகளுக்கு சரியான லாபம் கிடைப்பதால் வெண்டைக்காய் விளைச்சலையே விரும்புகின்றனர். இதுகுறித்து விவசாயி தேவராஜ் கூறியதாவது: கோடை காலத்தில் எல்லா பயிர்களும் குறைந்தளவே விளைச்சல் தரும். ஆனால், வெண்டைக்காய் மட்டும் நன்கு செழித்து வளரும். இதனால்தான், வெயில் காலங்களில் வெண்டைக்காயை பயிரிட்டு லாபம் பார்க்கிறோம். ஏக்கருக்கு இரண்டு டன் விளைச்சல் கிடைக்கிறது. கிலோவுக்கு 15 ரூபாய் கிடைப்பதில் மகிழ்ச்சியாக உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

---

**கோபியில் சூறாவளி: வாழை மரங்கள் சேதம்**

---

கோபிசெட்டிபாளையம்: கோபியில் வீசிய பலத்த சுறாவளி காற்றால் நூற்றுக்கும் மேற்பட்ட வாழைமரங்கள் சாய்ந்தன.தமிழகம் முழுவதும் கோடை வெயிலின் பாதிப்பு கடுமையாக உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் ஒரு மாதமாகவே வெயிலின் தாக்கம் அதிகளவில் உள்ளது. கோபி மற்றும் சுற்று வட்டாரத்தில் வெயில் வெளுத்து கட்டினாலும், வானம் அவ்வப்போது மப்பும் மந்தாரமுமாக இருக்கிறது.கோடை மழை பெய்யும் என கோபி பகுதி மக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் 16ம் தேதி மாலை கடுமையான சூறாவளி காற்று வீசியது. மழை அதிகளவில் பெய்யாத நிலையில் அடித்த சூறாவாளி காற்றால் குருமந்தூர், பங்களாபுதூர், பாரியூர் உள்ளிட்ட பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் அடியோடு சாய்ந்தன. குறிப்பாக கரட்டுபாளையம் பகுதியில் சூறாவளி காற்று பலமாக வீசியது. இதனால் செவ்வாழை, ரஸ்தாளி, கதளி வாழைத்தார்கள் குலையுடன் சாய்ந்தன.கோபி- சத்தி மற்றும் ஈரோடு ரோடுகளில் அரசியல் கட்சியினர் மற்றும் சமூக அமைப்புகள் வைத்திருந்த ஃபிளக்ஸ் போர்டுகளும் சாய்ந்தன. பங்களாபுதூர் பகுதியில் கடுமையான கோடை வெப்பத்தால் கருகி போயிருந்த தென்னை மற்றும் பனை மரங்களும் அடியோடு சாய்ந்தன. கோபி மற்றும்  சுற்று வட்டார பகுதிகளில் கோடை மழையை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளுக்கு, சூறாவளி காற்றால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**உரம் மற்றும் பூச்சி மருந்தில் கலப்படம் : குளித்தலை விவசாயிகள் குற்றச்சாட்டு**

குளித்தலை: உரம் மற்றும் பூச்சி மருந்தில் கலப்படம் அதிகரித்துள்ளதாக குளித்தலை பகுதி விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

குளித்தலை, நங்கவரம், நெய்தலூர், லாலாப்பேட்டை பகுதியில் தற்போது நெற்பயிர் பூட்டு பருவத்தில் உள்ளது. இவற்றின் தேவை மற்றும் வாழை, கரும்பு, கோரைப்பயிர்களுக்கும் யூரியாவுடன் பொட்டாஷ் கலந்த கலப்பு உரம் அதிகளவு விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இந்த கலப்பு உரத்தில் அதிகளவு மண் மற்றும் செம்மண் கலக்கப்பட்டுள்ளது. தரமற்ற கலப்பு உரங்களை விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுவதால் பயிரில் எவ்விதமான பலனும் காணப்படாத நிலை உள்ளது. அதிகளவு உரம் வாங்கினாலும் எவ்விதமான பயனும் ஏற்படவில்லை. மேலும், நெல், கரும்பு, வாழைக்கு பூச்சிக்கொல்லி மருந்து அடித்தும் பலன் ஏற்படவில்லை. உரம் கட்டுப்பாட்டு துறை அதிகாரிகள், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் இருந்தும் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்தின் தரம் அறியாமல் இருக்கின்றனர். உரம் விநியோகஸ்தர் மற்றம் உரக்கடை உரிமையாளர்களிடம் 'ஒப்பந்த' அடிப்படையில் ஆதாயம் அடைவதால், கலப்பட உரம் மற்றும் பூச்சி மருந்து குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது. உயிர்காக்கும் மருந்தில் கலப்படம் மற்றும் காலாவதியானவற்றை அழிக்க சுகாதாரத்துறை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுபோல், உரம் மற்றும் பூச்சி மருந்தின் தன்மை குறித்தும் வேளாண்துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**கோகோ சாகுபடி செய்யும் விவசாயிக்கு 50 சதவீத மானியம்**

கொட்டாம்பட்டி : கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் கோகோ சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.
இதுபற்றி அவர் கூறும்போது,"தென்னை மற்றும் பாக்குத் தோப்புகளில் கோகோவை ஊடுபயிராக பயிரிடலாம். இதனால் தென்னைக்கு இயற்கை உரம் கிடைப்பதுடன், களைகள் கட்டுப்படுத்தப்பட்டு, மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. கோகோ நாற்றுகள் காட்பரி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. இதனால் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும். வங்கிகள் மூலம் நடவு செலவிற்குத் தேவையான கடன் வசதியும் தோட்டக்கலை அலுவலர்களால் செய்து

தரப்படுகிறது. கோகோ பயிரிட விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை வளர்ச்சி மைய அலுவலர்களையோ, கொட்டாம்பட்டி தோட்டக்கலை உதவி இயக்குநரையோ அணுகலாம்," என்றார்.

**மீன்வளர்ப்பு கலந்தாய்வு கூட்டம்**

கொள்ளிடம் : கொள்ளிடத்தில் கொடுவா மீன்வளர்ப்பு குறித்த கலந்தாய்வு கூட்டம் நடந்தது.
மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம் ஆகியவை இணைந்து நடத்தின. தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய இயக்குனர் கிருஷ்ணய்யா தலைமை வகித்து பேசியதாவது: நாகை மாவட்ட கடலோர பகுதி அமைக்கப்பட்ட இறால் பண்ணைகள் இப்போது செயல்படாத நிலையில் உள்ளது. அதில் கொடுவா மீன் வளர்க்கலாம். கொடுவா மீன் வளர்த்தால் நல்ல லாபம் பெறலாம். கொடுவா மீன் வளர்க்க பெண்கள் முன்வந்தால் மத்திய, மாநில அரசுகள் 5 சதவீதம் மானியம் வழங்குகிறது. தற்போது ஆந்திராவில் அதிக லாபத்தில் கொடுவா மீன் வளர்ப்பு தொழில் நடக்கிறது. தரிசாக கிடக்கும் உவர் நிலங்களில் கொடுவா மீன் வளர்க்கலாம். கொடுவா மீன் வளர்ப்பு கடல் நீர், நன்னீர் மற்றும் பண்ணைகள் அமைத்தும் வளர்க்கலாம். மகேந்திரபள்ளியில் கொடுவா மீன் சிறப்பாக வளர்க்கப்படுகிறது என்றார்.
மத்திய உவர் நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய முதன்மை ஆராய்ச்சியாளர் திருநாவுக்கரசு திட்டம் குறித்து விளக்கினார். இணை இயக்குனர் பொன்னையா, அண்ணாமலை பல்கலைக்கழக கடல்வாழ் உயிரினத்துறை இயக்குனர் பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மீன்வளத்துறை இணை இயக்குனர் சுப்புராஜ் ஆகியோர்பேசினர். பின்னர் இறால் பண்ணை வளர்ப்போர் மற்றும் பண்ணை விவசாயிகளை மகேந்திரப்பள்ளிக்கு அழைத்துச் சென்று அங்கு கொடுவா மீன் வளர்க்கப்படும் விதம் குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

**வாழைப்பழம் விளைச்சல் அதிகரிப்பு, விற்பனை சரிவு**

தேனி : மாவட்டத்தில் வாழைப் பழம் விளைச்சல் அதிகரித்துள்ள போதிலும் வெயிலின் தாக்கம் அதிகம் இருப்பதால் விற்பனை சரிந்துள்ளது.
தேனி மாவட்டத்தில் கூடலூர், கம்பம், சின்னமனூர், எரசை பகுதிகளில் பச்சைவாழைப்பழம் விளைச்சல் அதிகம் உள்ளது. அதே போல் தேனி மார்க்கெட்டிற்கு குளித்தலை, தொட்டியம், கரூர் பகுதியில் இருந்து கற்பூரவள்ளி, ரஸ்தாளி, செவ்வாழை பழங்கள் வரத்தும், தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து பூவன் பழம் வரத்தும் அதிகம் உள்ளது. கடும் வெயில் காரணமாக கடைகளில் வாங்கி வைக்கப்படும் பழங்கள் 24 மணி நேரத்திற்குள் கருத்துப்போய் விடுகின்றன. இதனால் ஒரு நாளைக்கு மேல் பழங் களை வைத்து விற்பனை செய்யமுடிவதில்லை. எனவே கடைக்காரர்கள் மொத்த மார்க்கெட்டில் பழங்கள் கொள்முதல் செய்வதை பாதிக்குமேல் குறைத்து கொண்டுள்ளனர். விளைச்சல் அதிகரித்துள்ள நேரத்தில் விற்பனை குறைவு காரணமாக விலை வீழ்ச்சியடைந்துள்ளது. பூவன் பழம் ஒன்று 70 காசுக்கும், கற்பூரவள்ளி, பச்சை வாழை தலா ஒரு ரூபாய்க்கும், ரஸ்தாளி இரண்டு ரூபாய்க்கும், செவ்வாழை நான்கு ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

**வேளாண் அலுவலகத்தில் ஆத்மா திட்டக்குழு கூட்டம்**

அணைக்கட்டு:அணைக்கட்டு வேளாண்மை அலுவலகத்தில் ஆத்மா திட்டக்குழு கூட்டம் நடந்தது.நிகழ்ச்சிக்கு வட்டார உதவி ளோண்மை அலுவலர் சிவக்குமார் சிங் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் காண்டீபன், ஜெயபால், மகாலிங்கம் வையாபுரி முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் முருகன் வரவேற்றார்.ஆத்மா தொழில்நுட்ப உதவியாளர் அமரேந்திரன் திட்ட செயல்பாடு குறித்து விளக்கமளித்தார்.

---

தோட்டக் கலைத்துறை அலுவலர் சரஸ்வரி, உதவி அலுவலர்கள் தேசிங்ராஜன், எழிலரசன், கால்நடை அலுவலர் முருகன், பட்டு வளர்ச்சி துறை உதவி ஆய்வாளர் விஜயன், வேளாண்மை வணிகம் பிரிவு ராஜேந்திரன் ஆகியோர் தங்களது துறையின் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். கூட்டத்தில் ஆத்மா திட்ட நிர்வாகிகள் மற்றும் அணைக்கட்டு பகுதிக்கு உட்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அணைக்கட்டு வட்டாரத்தில் 2010-11ம் ஆண்டிற்கு தேவையான புதிய தொழில் நுட்பங்களை செயல்விளக்கங்கள் மூலம் செயல்படுத்துவது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முயல் வளர்த்தால் வருவாய் கொட்டும்**

திருப்பூர்: 'முயல் வளர்ப்பு, குறைந்த செலவில் கிராமப்புற மக்கள் நல்ல வருவாயை ஈட்ட உதவுகிறது; சாதாரண தீவனத்தை மட்டுமே உண்டு, சிறந்த இறைச்சிக்காக மாறும் தன்மை முயலுக்கு அதிகமாக உள்ளது. முயல் வளர்ப்பில் ஆர்வம் செலுத்தினால் நல்ல லாபம் பெற முடியும்' என, கால் நடைத்துறை டாக்டர்கள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறியதாவது: குறைந்த முதலீட்டில், குறைந்த இடத்துக்குள், அதில லாபம் ஈட்டும் தொழிலாக முயல் வளர்ப்பு மாறி வருகிறது. இது, இறைச்சிக்காகவும், தோலுக்காக வும், உரோமத்திற்காகவும் வளர்க் கப்படுகிறது. குறைந்த அளவு கொழுப்பு, அதிக புரதம், உயிர்ச் சத்து, தாது உப்பு நிறைந்தது; மனி தர்களின் உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்றது.

இவற்றை வளர்ப்பதற்கென தனியாக இடம் ஒதுக்க வேண்டியதில்லை. வீட்டின் பின்புறம், மொட்டைமாடி அல்லது தோட்டத்தில் வளர்க்கலாம். தீவனமாக காய்கறி கொடுத்தால் போதும். அதன் தோலை பதனிட்டு விற்பனை செய்யலாம். த்ழிவுப்பொருட்கள் பயிர்களுக்கு சிறந்த உரமாகும். முயல் இனங்களில் வெப்பமான பகுதிகளில் வளர்ப்பது; குளிர்பிரதேசங்களில் வளர்ப்பது என இரு வகைகள் உள்ளன. மொத்தம் உள்ள 13 வகைகளில் இரண்டு முதல் அதிகபட்சமாக ஆறு கிலோ வரை எடை உள்ள முயல்கள் உள்ளன. பசுந்தீவன முறையில் பச்சை தாவரங்கள், குதிரைமசால், முட்டைகோஸ், புற்கள் உள்ளிட்ட காய்கறிகளை கொடுக்கலாம். கலப்பு தீவன முறை, இளம் முயல் களை வேகமாக வளர்ச்சி அடையச் செய்யும். இம்முறையில், உடைந்த மக்காச்சோளம், அரைத்த கம்பு, கடலைபுண்ணாக்கு, தாது உப்புக் கலவையை தீவனமாக கொடுக்கலாம். குறைந்தது 50 கிராமில் இருந்து அதிகபட்சமாக 250 கிராம் வரை பருவத்திற்கேற்ப தீவனம் கொடுக்க வேண்டும். இரண்டு ஆண், 10 பெண் முயல் கள் வாங்கி, பண்ணை துவங்கும் போது, செலவு (12 முயல்களுக்கு தலா 200 வீதம்) 2,400 ரூபாய்; இவற்றுக்காக 400 சதுர அடி கொண்ட கொட்டகை அமைக்க (சதுர அடிக்கு 15 ரூபாய் வீதம்) 6,000 ரூபாய் செலவாகும்; கூண்டு அமைக்க 11 ஆயிரத்து 340 ரூபாய் என நிரந்தர முதலீடு 19 ஆயிரத்து 740 ரூபாய்.

ஒரு பெண் முயல் ஆண்டுக்கு ஆறு முறை சினைப்படும். சினைக் காலம் 28 முதல் 34 நாட்கள்; குறைந்தது இரு மாத இடைவெளியில், ஆறு அல்லது ஐந்து குட்டிகள் போடும். இக்குட்டிகள் குறைந்தது 29 நாட்களிலேயே அதன் குட்டிகளை ஈன்று விடும். இதில், ஓராண்டுக்கு குறைந்தபட்சம் 240 முயல்களை இறைச்சிக் காக விற்க முடியும். நன்கு வளர்ந்த முயல் 200 ரூபாய் வரை விற்பனையாகும். இதன்படி, 240 குட்டிகள் பெற்றுத்தரும் மொத்த வருமானம் 24 ஆயிரம் ரூபாய். இத்தகைய லாபம் தரக்கூடிய முயல்கள், சில நோய்களால் பாதிக்கப்படுகின்றன. தோல் சிரங்கு, சுவாச நோய், குடல் அலர்ஜி மற்றும் ரத்த கழிச்சல் ஏற் படக்கூடும். இதுபோன்ற நோய் கள் ஏற்படும் போது, காலதாமதம் செய்யாமல், கால்நடை மருத்துவமனையை நாட வேண்டும். நோய் தடுக்கும் வழிமுறை, பாதுகாப்பு முறை குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். ஆடு, மாடு வளர்ப்பை விட, முதலீடு குறைவான தொழிலாக முயல் வளர்ப்பு தொழில் விளங்குகிறது. இவ்வாறு, கால்நடைத்துறை டாக்டர்கள் தெரிவித்தனர்.

**ஒன்றரை லட்சம் விலை போகும் 50 கிலோ கொண்ட ஆட்டுக்கிடா**

ஏப்ரல் 20,2010,00:00  IST




நகரி : சித்தூர் அருகே, 50 கிலோ எடை கொண்ட ஆட்டுக்கிடாவை, அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம் மதனப்பள்ளியைச் சேர்ந்தவர் அமீர் சாயபு(45); அரிசி வியாபாரி. இவர், கடந்த ஆண்டு கர்நாடக மாநிலம், முல்பாகல் பகுதியிலிருந்து உயர் ரக ஆடு ஒன்றை வாங்கி, வளர்த்து வருகிறார். அந்த ஆடு, தற்போது 50 கிலோ எடை உள்ளது.எருது போல் காட்சியளிக்கும் இந்த கிடாவை வாங்க வியாபாரிகள், ஒரு லட்சத்து 50 ரூபாய் வரை தர சம்மதித்தும், அதை விற்க அமீர் சாயபு மறுத்து விட்டார்.சாதாரணமாக வெள்ளாடு, செம்மறி ஆட்டுக் கிடாக்கள், ஐந்தாயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை விலை போகும். இந்த அதிசய கிடாவை, சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் ஆச்சரியமாக பார்த்துச் செல்கின்றனர்.

**கிணறு தோண்டிய விவசாயி**

ஏப்ரல் 20,2010,00:00  IST



நலகொண்டா : விவசாயி ஒருவரின் விடா முயற்சியால், 66வது ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் கிடைத்தது.  ஆந்திர மாநிலம் நலகொண்டா மாவட்டத்தைச் சேர்ந்தவர் சிலுவுரிமோகன் ரெட்டி; விவசாயி. இவருக்கு, நலகொண்ட மண்டலம் புலிகில்ல கிராமத்தில் 24 ஏக்கர் நிலம் இருந்தது. இவர்,  தனது நிலத்தில் 65  ஆழ்துளை கிணறுகளை தோண்டினார். ஆனால், ஒன்றிலும்,  சிறுதுளி கூட தண்ணீர் கிடைக்கவில்லை. இவர், கிணறு தோண்டுவதற்காக

வாங்கிய, ஏழு லட்ச ரூபாய் வங்கிக் கடனை அடைக்க, தனது 14 ஏக்கர் நிலத்தை விற்றார். கடைசி முயற்சியாக, சமீபத்தில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் செலவு செய்து, ஒரு ஆழ்துளை கிணறும், பெரிய கிணறும் வெட்டினார். இதில், போதுமான அளவுக்கு தண்ணீர் கிடைத்தது. தண்ணீர் கிடைத்த மகிழ்ச்சியில், மின் இணைப்பு பெற்று விவசாயம் செய்து வருகிறார்.

தினத் தந்தி

**இந்தியாவிலேயே முதன்முறையாக கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் தாவர மரபு வங்கி**

*கோவை, ஏப்.20–*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள தாவர மரபு வளத்துறை வளாகத்தில், டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுவின் நிதி உதவியுடன் இந்தியாவிலேயே முதன் முறையாக தாவர மரபு வங்கி உருவாக்கப்பட்டு உள்ளது.*

*இந்த தாவர மரபு வங்கி மூலம் சிறந்த குணாதிசயம் கொண்ட பயிர் இனங்களை சேமித்து வைக்க முடியும். இதன் மூலம் வறட்சி தாங்கி வளரக்கூடிய மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்புதிறன் கொண்ட பல புதிய ரகங்களை உருவாக்க முடியும். இதன் தொடக்கவிழா 23–ந் தேதி நடக்கிறது. வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தொடங்கி வைக்கிறார்.இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலர் ரவிக்குமார் தியோடர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.*

***2 லட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ. 127 கோடி செலவில் காண்டூர் கால்வாய் முழுமையாக புதுப்பிக்கும் திட்டம் கருணாநிதி அறிவிப்பு***

*சென்னை, ஏப்.20–*

*2 லட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ. 127 கோடி செலவில் காண்டூர் கால்வாயை முழுமையாக புதுப்பிக்கும் திட்டத்தை கருணாநிதி அறிவித்தார்.*

*தமிழக சட்டமன்றத்தில் பொதுப்பணித்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதில் அளித்து, முதல்–அமைச்சர் கருணாநிதி வெளியிட்ட புதிய அறிவிப்புகள் விவரம்:–*

*அரசு ஊழியர்– கலைவாணர் அரங்கம்*

*★ அரசு அலுவலர்களின் கோரிக்கையை பரிசீலித்து, தாடண்டர் நகரில் அரசு குடியிருப்பு வளாகத்தில் உள்ள மிகப் பழைய 325 ஓட்டு வீடுகளை இடித்து விட்டு, 15 புதிய அடுக்குமாடிக் கட்டிடங்களை கொண்ட கட்டிடத் தொகுப்புகளை கட்ட அரசு முடிவெடுத்துள்ளது. இதில் ஒவ்வொரு கட்டிடமும் 10 தளங்களுடன் 100 குடியிருப்புகள் கொண்டதாக அமையும். மொத்தம் 1500 புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.*

*மேலும், வணிகவளாகம், பொதுப்பணித்துறை அலுவலர்கள் தங்கும் இல்லம், வங்கிகள், அஞ்சல் அலுவலகம், சமுதாயக் கூடம், விளையாட்டுத் திடல், நடைபயிற்சித் தடம், உடற்பயிற்சிக்கூடம், பூங்கா, உட்புற சாலைகள் முதலிய அனைத்து வசதிகளுடன் மறுகட்டமைப்பு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.*

*பசுமை கட்டிடம்*

*புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் கட்டுவதற்கு ஏதுவாக, கலைவாணர் அரங்கம் உள்ளிட்ட*

பல்வேறு கட்டிடங்கள் அகற்றப்பட்டன. மீண்டும் அனைவருக்கும் பயன்படும் வகையில் 1500 பேர் அமரக்கூடிய நவீன கூட்ட அரங்கமாக ரூ.50 கோடியில் கலைவாணர் அரங்கம் கட்டப்படும். 50 கோடி ரூபாய் செலவில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 1500 பேர் அமரக் கூடிய நவீன கலைவாணர் அரங்கம் கட்டப்படும். சுற்றுச்சூழல் அம்சங்களை கருத்தில் கொண்டு, வரும் காலங்களில் கட்டப்படும் ரூ.25 கோடிக்கு அதிகமான கட்டிடங்களை பசுமை கட்டிடங்களாக கட்டுவதற்கான வழிமுறைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆத்தூர், கிருஷ்ணகிரி

★ 3 கோடி ரூபாய் செலவில் பொதுப்பணித் துறை கட்டிடப் பிரிவின் அலுவலகங்களுக்குக் கணினிகள் வழங்கப்படும்.

★ 8.5 கோடி ரூபாய் செலவில் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் அணைக்கட்டு கால்வாய் சீரமைக்கப்படும்.

★ 6 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம் பாலேகுளி ஏரியிலிருந்து 28 ஏரிகளுக்கு புதிய வழங்கு கால்வாய் அமைக்கப்படும்.

★ 9 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம் மாவட்டம் நீஞ்சல்மடுவு அணைக்கட்டு மீண்டும் கட்டப்பட்டு கால்வாய் சீரமைக்கப்படும்.

மதுரை, திருச்சி, புதுக்கோட்டை

★ 23 கோடியே 50 லட்ச ரூபாய் செலவில் மதுரை மாவட்டம் நிலையூர் கால்வாயின் நீர் கடத்தும் திறனை அதிகரித்துச் சீரமைக்கப்படும். 19 கோடி ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்டம் விஸ்வகுடி அருகில் கல்லாற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்கப்படும்.

★ 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதுக்கோட்டை மாவட்டம் வெள்ளாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு அமைக்கப்படும்.

★ புதுக்கோட்டை மாவட்டம் முடியனாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு அமைக்கப்படும்.

★ 5 கோடி ரூபாய் செலவில் மதுரை மாவட்டம் வைகை ஆற்றில் விரகனூர் மதகு சீரமைக்கப்படும்.

★ 3 கோடி ரூபாய் செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் பனங்குடி மற்றும் குயவன் வாய்க்கால்கள் மேம்படுத்தப்படும்.

அரசின் ஆய்வில் உள்ள சில முக்கிய திட்டங்கள்

இதுதவிர, என்னேகொள் அணைக்கட்டின் இரு புறங்களிலுமிருந்து புதிய கால்வாய் அமைத்துப் பெண்ணையாற்றின் உபரி நீரை வறட்சிக்கு இலக்கான கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்குப் பாசன வசதி அளித்தல்; கிருஷ்ணகிரி வட்டம் சிங்கிரிப்பள்ளி கிராமம் அருகே நாச்சிகுப்பம் ஆற்றின் குறுக்கே ஏரி அமைக்கும் திட்டம்; திருச்சி மாவட்டம் சோழகம்பட்டி வாரி, தஞ்சாவூர் மாவட்டம் அய்யனாபுரம் வாரி, முதலைமுத்துவாரி ஆகியவற்றை இணைத்து, வெள்ளநீரைப் புதுக்கோட்டை மாவட்டம் அக்னியாற்றுக்குத் திருப்பும் திட்டம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பகுதிகளை வெள்ள அபாயத்திலிருந்து காப்பதற்காக வளவனாறு, கோரையாறு முதலான வடிகால்களைச் சீரமைக்கும் வெள்ள மேலாண்மைத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

பரம்பிக்குளம் அணை

பரம்பிக்குளம் அணையிலிருந்து, திருமூர்த்தி அணைக்கு நீரைக் கொண்டுவரும் சமதளக் காண்டூர் கால்வாய், பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்டத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது.

45 ஆண்டுகளுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட இக்கால்வாயின் நீர் கொள்திறன் குறைந்து வருவதையும், அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு நீர் விநியோகம் மற்றும் மின் உற்பத்தி தடைபடுவதையும் கருத்தில் கொண்டு, இக்கால்வாயை முழுமையாகச் சீரமைக்க வேண்டும் என்று கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் தொடர்ந்து கோரி வருகின்றார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று, இக்கால்வாயை முழுமையாகப் புதுப்பிக்க 127 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பெரும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளதுஇத்திட்டத்தினால் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஏறத்தாழ இரண்டு லட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும் பயனடைவர்.

அ.தி.மு.க. ஆட்சியை விட அதிக நிதி

*பவானி ஆற்றில் வெள்ளக் கால்வாய்களில் கிடைக்கும் உபரி நீரை காரமடை, அன்னூர், அவிநாசி, புளியம்பட்டி, பல்லடம், மற்றும் பெருந்துறை ஆகிய பகுதிகளுக்குத் திருப்புவதற்கான சாத்தியக் கூறு பற்றிய தொழில் நுட்ப வல்லுநர்களின் அறிக்கையின் அடிப்படையில் அத்திக்கடவு அவிநாசி கால்வாய்த் திட்டத்தினை விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள அரசு 14.12.2009 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.*

*நீண்ட நாட்களாகக் கோரப்பட்டு வரும் இத்திட்டத்துக்கான விரிவான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.*

*பொதுப்பணித் துறையில் – கட்டிடப் பணிகளுக்காக – 2001–ம் ஆண்டு முதல் 2005–2006 வரையில் ஐந்தாண்டு காலத்தில் 2,059 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததற்கு மாறாக 2006 முதல் 2010–2011–ம் ஆண்டு வரையில் இந்த ஆட்சியில் 5,207 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அதுபோலவே, பாசனப் பணிகளுக்காக 2001 முதல் 2006 வரை 5 ஆண்டு காலத்தில் 1,995 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு மாறாக இப்போது –இந்த 5 ஆண்டு கால கழக ஆட்சியில் 3,915 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*நடப்பாண்டில் 247 கோடியே 6 லட்ச ரூபாய் செலவில் மேலும் 303 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டிட நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு கருணாநிதி பேசினார்.*

# சூறாவளி காற்றால் வாழைகள் சேதம்



கொழிஞ்சாம்பாறை, பகுதியில் நேற்று முன்தினம் மாலை பயங்கர சூறாவளி காற்று வீசியது. இதனால் பெரும்பாறைசள்ளையை சேர்ந்த பெண் விவசாயி செல்வம் தோட்டத்தில் பயிரிட்டு இருந்த 2 ஆயிரம் வாழைகள் சாய்ந்தன. சேதம் அடைந்த வாழைத் தோட்டத்தை படத்தில் காணலாம்.